எல்ல பிரதேசசபை
பதுளை மாவட்டம்
-------------------------------

1. நிதிக்கூற்று

1.1 நிதிக்கூற்று சமர்ப்பித்தல்

2018 ஆம் வருடத்தின் நிதிக்கூற்று 2019 ஏப்பிரல் 04 ஆம் திகதி கணக்காய்வுக்கென அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்று தொடர்பாக கணக்காய்வு அதிபதியின் அறிக்கை 2019 மே மாதம் 30 திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே மாதம் 31 ஆம் திகதி தவிசாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

1.2 நிலைகள் தொடர்பில் கணக்கீடு செய்யப்பட்ட அபிப்ராயம்

இந்த அறிக்கையில் நிலையை விளக்கிய அபிப்ராயம் தொடர்பாக விபரத்தை தரும் பகுதியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலுள்ள விளைவுகள் தவிர்ந்த நிதிக்கூற்றுக்களில் 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதிக்கு எல்ல பிரதேசசபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்துடன் நிறைவடையும் ஆணிடிற்கான அதன் நிதி செயற்பாடு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் விதிகளுக்கமைவாகவும், உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை பிரதிபலித்து நிற்கின்றது என்பதே எனது அபிப்ராயமாகும்

1.3 நிலைப்படுத்தப்பட்ட அபிப்ராயத்திற்கான அடிப்படை

(அ) கணக்கீட்டு ரீதியிலான குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (i) | கடந்த வருடத்திற்கான ஊழியர் பிணை வைப்பு தொகை முழ முதலீட சரியாக கணக்கிடப்படாததால், பினை முதலீடு மற்றும் ஒன்றிணைந்த நிதியம் ரூ.18,202 தொகை குறைவாக காணப்பட்டது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தின் ஜனல் பதிவொன்றின் மூலமாக சரிசெய்கின்றேன். |
| (ii) | மீளாய்வுசெய்ய்பட்ட ஆண்டின் முத்திரைக்கட்டணமூடான வருமானம் ரூ.512,614 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தின் ஜனல் பதிவொன்றின் மூலமாக சரிசெய்கின்றேன். |
| (iii) | மீளாய்வுசெய்ய்பட்ட ஆண்டிற்காக கணக்காய்வுக்கட்டணத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தின் ஜனல் பதிவொன்றின் மூலமாக சரிசெய்கின்றேன். |
| (iv) | மீளாய்வுசெய்ய்பட்ட ஆண்டில் கிடைக்க வேண்டியவ ட்டி மூலமாக வருமானம் ரூ.102,523 தொகை கணக்கிடப்படவில்லை. | கணக்கு சரிசெய்யப்பட வேண்டும். | 2019 வருடத்தின் நிதிக்கூற்றுக்களில் சரியான பொருத்தப்பாட்டை மேற்கொள்வேன். |

(ஆ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல ஆதாரங்கள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுப்பு அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| ரூ.302,494,340 பெறுமதியான 02 சொத்து விடயங்கள் ரூ.516,257 பொறுப்பு விடயங்கள் 03 மற்றும் ரூ.288,161 தொகை முற்பண விடயமொன்று விபரமடங்கிய உபஅட்டவணை, ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில் ரீதியிலான மதிப்பீட்டாளர்களது அறிக்கை மற்றும் கால பகுப்பாய்வு அறிக்கை சமர்ப்பிக்காமையால் கணக்காய்வில் திருப்திகரமான வெளிப்பாடு இருக்கவில்லை. | நித்தகூற்றுக்களில் காணப்படும் கணக்கு மிகுதிகளை உறுதிப்படுத்தும் ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும். | 2019 ஆம் வருடத்தின் கணக்கர்யவுக்கு அந்த மிகுதிகளை சமர்ப்பிப்பதாக, |

**1.4** <u>ஏற்புடையதாக இருக்காமை</u>

சட்டத்திட்டங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு அமைவாக இல்லாமை

| சட்ட திட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு உட்பிரவேசிப்பு | ஏற்புடையதாக இருக்காமை | பரிந்துரை | கணக்குகொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபை சட்டம் 49 மற்றும் 52ஆம் பிரிவு | .இணங்கண்டு கொண்ட 21 அனுமதியற்ற கட்டிடங்களை அப்புறப்படுத்துவதற்கு அல்லது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சட்ட ஒழுங்குவிதிக்கமைய நடவடிக்கையெடுக்க வேண்டும். | 2019 வருடத்தில் அந்த நிர்மாணிப்புக்காக சட்ட நடவடிக்கையெடுப்பேன். |
| (ஆ)1988 பிரதேசசபை சட்டம் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் (நிதிப்பிரமாணங்கள்) 203 | சபை ஆதனங்கள் தொடர்பாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | விதிக்கமைய சபை ஆதனங்கள் கணக்கெடுப்புக்குள்ளாக்கப்பட வேண்டும். | அவ்வாறு வரும் ஆண்டுகளில் கணக்கெடுப்பு செய்வேன். |

## 2. <u>நிதி மீளாய்வு</u>

### 2.1 <u>நிதி பெறுபேறு</u>

சமர்ப்பிக்கப்படும் நிதிக்கூற்றுக்களுக்கமைய டிசம்பர் 31 திகதியுடன் நிறைவடைந்த வருடத்திற்கான சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய ரூபா வருமானம் 101,893 ஆவதுடன், அதற்கிசைவான கடந்த வருடத்தின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூ.25,662,283 தொகையாக காணப்பட்டது.

### 2.2 <u>வருமான நிர்வாகம்</u>

#### 2.2.1 <u>மதிப்பிடு செய்யப்பட்ட வருவாய், பட்டியலிடப்பட்ட வருவாய், திரட்டிய வருவாய் மற்றும் நிலுவை வருவாய்</u>

மீளாய்வு செய்யப்பட்ட வருடம் மற்றும் நிறைவடைந்த வருடத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம் பட்டியலிடப்பட்ட வருமானம் திட்டிய வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருவாய் மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம | பட்டியிலிடப்பட்ட வருமானம | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியிலிடப்பட்ட வருமானம | திரட்டிய வருமானம் | டிசம்பர் 31 திகதிக்கு மொத்த நிலுவை |
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| (i) | சோலைவரி மற்றும் வரி | 3,526,630 | 4,476,585 | 2,919,986 | 6,277,601 | 4,426,630 | 4,426,500 | 2,785,330 | 6,314,316 |
| (ii) | வாடகை | 1,370,000 | 1,357,516 | 734,476 | 884,929 | 1,475,200 | 1,245,839 | 792,967 | 853,618 |
| (iii) | பிற வருமானம் | 7,959,500 | 2,645,598 | 2,377,090 | 13,578,640 | 8,890,000 | 7,575,688 | 4,356,550 | 4,855,898 |
| | மொத்தம் | 12,856,130 | 8,479,699 | 6,031,552 | 20,741,170 | 14,791,830 | 13,248,027 | 7,934,847 | 12,023,832 |

#### 2.2.2 வருமானம் திரட்டல் தொடர்பான செயலாக்கம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட ஆண்டில் பட்டியலிடப்பட்ட ரூ.8,479,699 தொகையான மொத்த வருமானத்திலும் முன்னர் இருந்த மிகுதி வருட இறுதிக்குள் ரூ.20,741,170 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிட வேண்டும். | நிலுவை வருமானம் 2019 ஆம் ஆண்டிலும் முழுமையான அறவிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |
| ஓராண்டு காலத்திற்கும் மேலாக வருகின்ற கிடைக்க வேண்டிய ரூ.37,654,599 தொகை மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கிடைக்க வேண்டிய மிகுதியை அறவிட நடவடிக்கையெடுக்க வேண்டும். | கிடைக்க வேண்டிய வருமானத்தை அறவிட்டுக்கொள்ளவில்லை. |

2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணமும்.

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| **(அ)** நீதிமன்ற தண்டப்பணம | | |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிட வேண்டிய ரூ.2,087,375 தொகை ஆ க இருந்தது. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும். | 2019 வருடத்தில் நீதிமன்ற தண்டப்பணம் அறவிடுவேன். |
| **(ஆ)** முத்திரைக்கட்டணம் | | |
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அறவிடப்பட வேண்டிய நிலுவை முத்திரைக்கட்டணம் ரூ.9,958,563 ஆனது. | நிலுவை முத்திரைக்கட்டணம் அறவிடப்பட வேண்டும். | 2019 வருடத்தில் முத்திரைக்கட்டணம் அறவிடுவேன். |

**3.** செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாக்கம்

பிரதேசசபை சட்டத்தின் 03 பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பாதைகள் தொடர்பான விடய்ஙகளை முறைமைப்படுத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல், மக்களது வசதியான பயன்பாடு வசதி மற்றும் நலன்புரி ஆகியவையான சபையினால் நிறைவேற்ற வேண்டியதான கருமங்கள் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | நிலைபேறான அபிவிருத்திஇலக்கு<br>சபை ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 தொடர்பாக அறிந்திருப்பினும் சபைக்குத்தாக மேற்கொள்ள வேண்டிய நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள் மற்றும் இலக்குகள் இனங்காணப்படவில்லை | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடையும் விருத்தி மட்டத்தை அளவிடல் தொடர்பான ஆண்டுரீதியான விருத்தி இலக்கு மட்டம் அளவிடப்படல் வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தெளிவாக இனங்கண்டும் அதனை அளவீடு செய்வதற்கான குறிக்காட்டிகளை இனங்கண்டு வருங்காலத்தில் செயலாற்றுவேன். |
| (ஆ) | செயல் திட்டமிடல் | | |
| | மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்கான செயல் திட்டமிடல் வரைபு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டமிடல் வரைபு தயாரிக்கப்படல் வேண்டும். | 2019 வருடத்திற்காக செயல் திட்டமிடல் வரைபு தயாரித்தல் வேண்டும். |

**3.2** முகாமைத்துவ விணைத்திறன் அற்ற தன்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | சபையினால் நடாத்திச்செல்லப்படும் குடிநீர் விநியோகத்திட்ட 27 செயற்றிட்டங்களில் 24 இற்காக நீர் மானி பொருத்தப்படாது நிலையான கட்டணம் மாத்திரம் அறவிடப்படுள்ளது. | அனைத்து குடி நீர் செயற்றிட்டங்களுக்கும் நீர் மானி பொருத்தப்பட வேண்டும். | தற்போது 03 செயற்றிட்டங்களுக்கு நீர் மானி பொருத்தப்பட்டுள்ளது. மிகுதி நீர் விநியோகத்திட்டங்களுக்காக நீர் மானி பொருத்த நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | ஓராண்டு மேலாக காணப்படும் ரூ.16,004,560 தொகை கடன்கொடுத்தோர் மிகுதியாக மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திலும் சரி செய்யப்படவில்லை. | செலுத்த வேண்டிய மிகுதி சரிசெய்யப்பட வேண்டும். | சரிசெய்யப்பட நடவடிக்கையெடுப்பேன். |

**3.3** மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு ஒரு பதவிக்காக மேலதிக 02 பணியாளர்கள் இருந்தனர். | மேலதிக பணியாளர்தொகுதியின் பதவி அனுமதிக்கப்பட வேண்டும். | மேலதிக பணியாளர்தொகுதியின் பதவிகள் அனுமதிக்க நடவடிக்கையெடுப்பேன |
| (ஆ) | மீளாய்வு செய்யப்பட்ட வருடத்தின் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு சபையின் 04 பதவிகளுக்கு 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பணியாளர்தொகுதியின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கையெடுப்பேன் |
| (இ) | இடமாற்றம் பெற்றுச்சென்ற மற்றும் சேவையை விட்டு விலகிச்சென்ற இரு உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூ.109,165 தொகையான கடன் பணம் அறவிடப்பட்டிருக்கப்படவில்லை. | ஊழியர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியரொருவரிடமிருந்து அறவிட நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. |

3.4 கொள்வனவு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 வருடத்தின் கொள்வனவு திட்டமொன்று தயாரிப்பேன். |

**4.** ˙<u>கணக்கீட்டு செயற்பாடு மற்றும் நல்லாட்சி .</u>

4.1 <u>கண்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டிகள்</u>

| கணக்காய்வு அவதானிப்புக்கள | பரிந்துரை | கணக்கு கொடுக்கும் அலுவலரின் கருத்துரைப்பு |
|---|---|---|
| முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கை இல.டி.எம்.ஏ 2009 (01) கொண்ட 2009 ஜூன் 09 கொண்ட சுற்றறிக்கைக்கு அமைய காலாண்டுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி கூட்டத்தை நடாத்த வேண்டுமெனினும் மீளாய்வுசெய்யப்பட்ட வருடத்திற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி 02 மாத்திரம் நடாத்தப்பட்டுள்ளது. | .சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கமைய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்தப்பட வேண்டும் | 2019 வருடத்தில் காலாண்டு ஒரு தடவை வீதம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டி நடாத்துவதற்கு நடவடிக்கையெடுப்பேன். |